**INDIAN JOURNAL OF TAMIL** | Volume 1 | Issue 3

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# தமிழ் நாவல்களில் மார்க்சியச் சிந்தனை

**ச. துரைமுருகன்** [அ]

[அ] தமிழ்த்துறை, பார்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திண்டுக்கல்- 624002, தமிழ்நாடு, இந்தியா.

# Marxist thought in Tamil Novels

**S. Durai Murugan** [a,*]

[a] Department of Tamil, Parvathy's Arts and Science College, Dindigul–624002, Tamil Nadu, India.

*Corresponding Author Email: durgastalin12@gmail.com

(Received: 04th August 2020; Accepted: 28th August 2020)

DOI: http://doi.org/10.34256/ijot2033

**Abstract:** Marxism, which produced the theory of communism, is very extensive. This field that originated in the West and grew up in Tamil novel literature, and Karl Marx and Friedrich Engels are the founders of Marxism, which has the principle of equality for the working class. The theory of reflection is the theory that is primarily in the literary theories advanced by Marxism. That is, the class conflicts in society cause crises in human lives. The economic inequality in society is the primary cause of social contradiction. Struggles erupt when the bourgeoisie exploits the working people. This article seeks to examine the struggles in Tamil novels published in the 21st century.

**Key Words:** Marxism, Tamil novels, Karl Marx, Friedrich Engels, Tamil literature

## நிலவுடைமைக்கு எதிரான போராட்டம்

இந்திய நாட்டின் மரபு வழிச் சமூகம் வேளாண்மை அடிப்படையிலான கிராமப் பொருளாதாரத்தைக் கொண்டதோர் அமைப்பாக விளங்கியது. வர்க்கப் பாகுபாடுகளுக்கு நிலவுடைமை காரணமாயிற்று. நிலவுடைமையாளர்கள் மேலவர்க்கமாகவும்; நிலவுடைமையாளர்களின் பண்ணைகளில் கூலிக்கு உழைப்பவர்கள் கூலி உழவர்கள் என்ற அடித்தட்டு மக்களாகவும் இருந்தனர். இந்தியச் சமூக அமைப்பில் சமூக மதிப்புகளே வர்க்கப்படிகளை உருவாக்கின.

“பொருளாதாரக் காரணங்களால் விரைவான மாறுதல்களுக்கு உள்ளாகும் சமூக அமைப்பில் வர்க்கப் படிநிலைகளின் தோற்றம் தவிர்க்க முடியாதது” என்கிறார் மாக்ஸ்வெபர் (Mohan, 1989).

நிலவுடைமையாளர்களான பண்ணையாளர்களுக்கும், பண்ணையில் வேலை செய்யும் கூலி உழவர்களுக்கும் இடையே நடைபெறும் போராட்டம் நிலவுடைமை ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டமாகும். நிலவுடைமைக்கு எதிரான போராட்டத்தை

சோலை சுந்தரப்பெருமாளின் "செந்நெல்" நாவல் பேசுகின்றது. 1968 ஆம் ஆண்டு டிசம்பர் 25-இல் தஞ்சை கீழ்வெண்மணியில் பண்ணையாளர்ளும் அவர்களது அடியாட்களும் 44 விவசாயத் தொழிலாளர்களை, பெண்களை, குழந்தைகளை, கிராம ஏழை மக்களைத் தீயிட்டுப் பொசுக்கிய மனிதாபமற்ற கோரச்சம்பவத்தின் அவலம் கசியும் நிலைதான் "செந்நெல்" நாவலின் மையக்கருத்தாக அமைந்துள்ளது.

கூலி விவசாயிகளுக்குள் மெல்ல மெல்ல வர்க்க உணர்வு ஏற்பட்டு கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து கூலி உயர்வுக்காகப் போராட்டம் நடத்துகின்றனர். காலம்காலமாக நிலப்பிரபுக்கள் கொடுக்கின்ற கூலியைப் பெற்றுக்கொண்டு நாள் முழுவதும் உழைப்பைக் கொட்டிவந்த விவசாயத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து போராட முடிவு செய்கின்றனர்.

"..........காரியக்காரய்யா! காலம்காலமா நாங்க ஆடுமாடுகளைப் போல ஆண்டமாருங்க கொட்டில்லேயே வாழ்ந்துட்டோம். இப்பதான் எங்க சனங்களுக்கு கணணத் தொறந்து விட்டிருக்கு செங்கொடிக்கட்சி. நாங்க கூண்டோட அழிஞ்சிப் போவோமே தவிர.... செங்கொடிய எறக்கிட்டு நெல் உற்பத்தியாளர் சங்கக் கொடிய ஏத்தி ஊரோட ஒத்துப்போய் வாழ்றதவிட எங்க சனங்களையெல்லாம் அரளிவெதைய அரைச்சிக் குடிச்சிட்டு ஒத்தடியா சாவலாம். ராத்திரி நாங்க கூடினோம். அரைவயித்துக் கஞ்சி குடிச்சிக்கிட்டு கெடந்தாலும் பரவாயில்ல. நம்ம சனங்க மானம் மரியாதையைக் காப்பாத்தியாவனும். அதுக்கு செங்கொடி உசந்தாவனும்ன்னு பேசினோம். அதுக்காவ நாங்க உசுரக் கொடுக்கவும் தயாராக இருக்க முடிவு எடுத்துட்டோம்" (செந்நெல். ப.122) என்னும் பகுதிகள் விவசாயத் தொழிலாளர்கள் தாங்கள் கஞ்சி இல்லாமல் செத்தாலும் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு விலகமாட்டோம் என்று நிலவுடைமையாளர்களுக்கு எதிராகப் போராடுவதை வரிவாக எடுததுரைக்கின்றன.

## முதலாளியத்திற்கு எதிரான போராட்டம்

காலம் காலமாக முதலாளிகள் தொழிலாளர்களை ஒடுக்கும் அடக்குமுறைகள் தொடர்ந்து வந்துள்ளன. அடக்குமுறைக்கு எதிராகவும் உழைப்புக்கேற்ற ஊதியம் கேட்டும் தொழிலாளர்கள் போராட முன்வருவதை நாவல்கள் வெளிப்படுத்துகின்றன.

"தொழிலாளர்கள் தமது வாழ்க்கைத் தேவைகளுக்காக முதலாளிகளையும், அதிகார வர்க்கத்தினரையும் இனியும் சார்ந்திருக்க மாட்டார்கள். இது தொழிலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் இயக்கத்தின் ரகசியமாகும். இது நூல்களைப் படிப்பதன் மூலம் வருவதல்ல. சொந்த வாழ்க்கை அனுபவத்திலிருந்து வருவதாகும்" என்பர் அறிஞர் (Sisupalan, 2009).

தொழிலாளர்களின் கதை கூறும் போக்கில் பல குடும்பங்களின் கதையை கு. சின்னப்ப பாரதியின் "சுரங்கம்" நாவல் எடுத்துரைக்கின்றது. தங்களது நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தித் தொழிலாளர்கள் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை வலியுறுத்துகின்றார் ஆசிரியர். நியாயமான சம்பளம், வைத்தியச் செலவு, கம்பெனி வீடு, பண்டிகை கால விடுமுறை, பள்ளிக்கூடம் போன்ற அடிப்படைத்

தேவைகளைக் கேட்டு முதலாளிகளுக்கு எதிராகப் போராடுகின்றனர்.

பிகாஸ் முழக்கமிட்டான். எங்களுக்கு நியாயமான சம்பளம் கொடு, வைத்தியச் செலவு கொடு, கம்பெனியிலே வீடுகட்டிக் கொடு, சம்பளத்தோடு பண்டிகை கால விடுமுறை கொடு, கரி அளவை சரியானபடி நிர்ணயம் செய்..... எங்கள் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் வேண்டும். எங்கள் பெண்களின் கற்பு காப்பாற்றப்படணும். சுரங்கத்தில் பாதுகாப்பு வேண்டும். வைத்திய வசதி வேண்டும். சங்க உரிமை வேண்டும்.

தொழிலாளர்கள் பாட்டுப் பாடுவது போல் முழக்கங்களை முழங்கிக் கொண்டே இருந்தார்கள். சரவெடி வெடிப்பது போல் தொடர் முழக்கங்கள் எழுந்து கொண்டே இருந்கன. (சுரங்கம்,ப.75) என்னும் பகுதிகள் சுரங்கத் தொழிலாளர்கள் முதலாளியத்திற்கு எதிராகத் தங்களது அடிப்படைத் தேவைகளை வலியுறுத்திப் போராடுவதை உணர்த்துகின்றன.

## அரசுக்கெதிரான போராட்டம்

சமூகத்தினுடைய நல்வாழ்வுக்கான சட்டங்களை இயற்றுவதும் அவற்றைச் செயல்படுத்துவதும் அரசின் முக்கியமான பொறுப்பு. ஆனால் சமூகத்தில் செல்வர்களும், அதிகாரத்தின் உசச்த்திலிருப்பவர்களும், மேல்சாதியினரும் தம் நலன்களுக்கு ஒத்தவகையில் திட்டங்களை வளைக்க முடியும். காவல் துறையினரும் இவர்களுடன் சேர்ந்து கொள்கின்றனர். உண்மையை அறிந்து தெளிவுபடுத்த வேண்டிய அரசு அதிகாரிகளுக்கு எதிராகப் போராட்டம் நடைபெறுவதை நாவல்கள் கூர்மையுடன் சித்திரிக்கின்றன. ஏழைகளுக்கு நீதி கிடைப்பதில்லை. உண்மையான அரசு வகுத்த சட்ட நடைமுறைகளுக்கு உடன்பட முடியாதவர்களுக்கு எதிராகப் போராடுகின்றனர்.

"தீண்டாமை என்பது இந்து மதத்தின் களங்கம் என்றும் அது அடிமைத்தனத்தpன் மறைமுக அமைப்பு" என்றும் அம்பேத்கர் கூறியுள்ளார்.

"தீண்டாமை நமது சமுதாயத்திற்கு ஒரு கறை. நமது சமுதாயத்திற்கு ஒரு சாபக்கேடு" என்கிறார் குன்றக்குடி அடிகளார் (Adigalar, 1990).

கிராமங்களில் இன்றும் நடைமுறையிலிருக்கும் தீண்டாமை, இரட்டைக் குவளைமுறை போன்றவற்றைக் கண்டித்து அரசு அதிகாரிகளிடம் மனு கொடுத்துப் போராட்டம் நடத்துவதை சோலை சுந்தரப் பெருமாளின் "தப்பாட்டம்" நாவல் எடுத்துரைக்கின்றது.

....சார்! நீங்க எங்களை எப்படி அன்னிய ஆளுன்னு சொல்லமுடியுது? நான் கம்யூனிஸ்ட் கட்சியோட அந்த கிராமம் இருக்கிற தாலுக்கா செயலரா இருக்கேன். இந்த தோழர், தோழப்பன் அந்தக் கிளையோட செயலர். அந்தக்கிளை பாதிக்கப்படும்போது நான் தலையிட்டு பிரச்சினையை தீத்து வைக்க கம்யூனிஸ்ட் கட்சி சொல்லுது. இன்னு சொல்லப்போனா நீங்க சொல்லுற ஹரிசன மக்க ஜாதி இந்துக்களால ஒடுக்கப்படுறத அந்த மக்களே விரும்பாமத்தான் ஒண்ணு தெரண்டு நிக்கறாங்க. அவங்க எல்லாருமே கம்யூனிஸ்ட் கட்சியிலே இல்ல. பல கட்சிக் காரவங்களாதான் இருக்காங்க. எங்களோட

வழிகாட்டுதல எதிர்பார்த்து வர்றவங்களை நாங்க எப்படி விரட்டி அடிக்க முடியும்? நாங்களும் எல்லா அதிகாரிகிட்டவும் அந்த கிராமத்தில் நடக்கிற தீண்டாமைக் கொடுமை பத்தி பலமுறை பேசிருக்கோம். மனு கொடுத்திருக்கோம். அதன் பலன் இல்லாதப்ப தான் மனித உரிமை கமிஷனுக்கும் முதல் அமைச்சருக்கும் மனு கொடுக்கும்படியா ஆயிட்டு……” (தப்பாட்டம். ப.245) என்னும் பகுதிகள், கிராமத்தில் நடைமுறையில் இருக்கும் தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து போராடுவதை எடுத்துரைக்கின்றன.

## போராட்டங்களில் பெண்களின் பங்கு

சமுதாய மாற்றத்திற்குப் பெண்களின் பங்கு இன்றியமையாதது. இது உலக இயல்பு. இந்நடப்பியலை ஒட்டிப் போராட்டங்களில் பெண்களின் பங்கு முக்கியமானதாக இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் நிலவுடைமையாளர்கள் விவசாயக் கூலித்தொழிலாளர்களை அடக்கி ஒடுக்கும்போது, பெண்ணான விசாலம் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து போராடத் துணிவதை சோலை சுந்தர பெருமாளின் “தப்பாட்டம்” நாவல் எடுத்தரைக்கின்றது.

“……. தாத்தா! அதைப்பத்தியெல்லாம் நீங்க இப்ப பேசிக்கிட்டு இருக்க வேணாம் தாத்தா!. நம்ம சனங்களுக்கு இப்பதான் கொஞ்சம் சொரனை வந்திருக்கு. இந்த நேரம் நம்ம ஊருக்குள்ள பொண்டுவளுக்காவ நானே முன்னுக்கு நின்னு கட்சி கட்டலாம்னு முடிவு பண்ணிருக்கேன்.” (தப்பாட்டம், ப.187) என்னும் பகுதியிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியினால் விழிப்புணர்வு பெற்ற விசாலம் நிலவுடைமையாளர்களுக்கு எதிராகப் போராட முன்வருவதை அறிய முடிகிறது.

தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல். அதைப் பின்பற்றுவோர் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர் என்று அரசு அறிக்கை விடுத்தாலும், சட்டங்கள் இருந்தாலும், சமுதாயத்தில் அது பரவிக் கிடக்கிறது. “தீண்டாமை என்பது இந்து மதத்தின் களங்கம் என்றும் அது அடிமைத்தனத்தின் மறைமுக அமைப்பு” என்றும் அம்பேத்கர் கூறியுள்ளார்.

“தீண்டாமை என்பது சாதிய அமைப்பின் விளைபொருளல்ல. இந்துயிசத்துக்குள் நுழைந்துவிட்ட உயர்வு தாழ்வு வேறுபாடுகளைக் கற்பித்தலின் விளைவாகும்” 6 என்று மகாத்மா காந்தியின் கருத்தை எடுத்துக் காட்டுகிறார் கோ.கேசவன் (Kesavan, 1994).

தீண்டாமைக் கொடுமையை எதிர்த்துப் போராட்டம் நடத்தியவர்களில் விசாலம் என்ற பெண்ணையும் படைத்துக் காட்டியுள்ளார் சோலை சுந்தர பெருமாள். வீட்டுக்குள்ளேயே பெண்களின் வாழ்க்கை தொடங்கி முடிவுற்று வந்த காலங்களில் பெண் தீண்டாமையை எதிர்த்து அரசு அதிகாரிகளுடன் வாதாடுவதை நாவலில் காணமுடிகிறது.

“……வயக்காட்டுல வேலை பாத்துட்டு வர்ற பொம்பள ஆளுங்க வந்து கேட்டா அந்த டமராச் செட்டுல கூடத் தரமாட்டாங்க. பொம்பள ஆளங்களுக்குன்னு தனியா வச்சிருக்கிற அலுமினிய டமராச் செட்டுலதாங்க கொடுப்பாங்க…ன்னு நாலையும் உதிர்த்துட்டு நிக்கிற

அந்தக்குட்டி விசாலம் ஆம்பள மாதிரி பேசினதும்" (தப்பாட்டம், ப.242) என்னும் பகுதிகள்

தீண்டாமைக்கு எதிராகப் பெண் போராட முனைவதையும், அவ்வாறு போராட முற்படும் பெண்ணை உயர்சாதியினர் மரியாதைக் குறைவாகப் பேசுவதையும் எடுத்துரைக்கின்றன.

அரசானது எப்போதும் நிர்வாகத்துக்கே துணையாகச் செயல்படும் தொழிலாளர்கள் கூலி உயர்வுக்காகப் போராட்டம் நடத்துகின்ற பொழுது, முதலாளி வர்க்கம் கூலியை உயர்த்துவதுடன் வேலை நேரத்தையும் அதிகப்படுத்துகிறது. இதனால் உரிய நியாயம் கேட்டுத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

"நிலமற்ற விவசாயிகள் உண்மையில் கிராமப்புற பாட்டாளிகள் ஆவர். சோசலிசத்திற்கான போராட்டத்தில் அவர்கள் உறுதியாகத் தொழிலாளி வர்க்கத்தின் பக்கம் நிற்பார்கள். அதே போல அவர்கள் உயர்ந்த புரட்சிகர வர்க்க உணர்வை வெளிப்படுத்துகின்றனர்" (Sisupalan, 2009).

தேயிலைக் காடுகளில் வேலை செய்யும் பெண்களும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து போராடுவதை சி. ஆர். ரவீந்திரனின் "தேயிலைக் கொழுந்து" நாவல் குறிப்பிடுகின்றது.

"வள்ளியோடு, மருதாயும் வந்திருந்தாள். மயிலாளின் கையைப் பற்றிக்கொண்டு பவுனா நடந்தாள். கருப்பாயி, தெய்வானை, செல்லம்மா, கன்னியம்மா போன்றவர்கள் கூட வந்திருந்தார்கள். எல்லோரும் கூட்டத்தில் அவ்வப்போது கண்களில் பட்டு மாயமாய்ப் போனார்கள். வள்ளிக்கு அதைப் பார்க்கப் பெருமையாக இருந்தது. அத்தனை கூட்டத்தையும் வால்பாறை தாங்குமாவெனக் கேட்டுக்கொண்டாள். பலரும் கைகளில் கொடிகளை ஏந்தியபடி நடந்தார்கள். அங்கங்கே சிவப்புக் கொடிகள் பளிச்சென்றிருந்தன." (தேயிலைக் கொழுந்து, ப.157) என்னும் பகுதிகள் அடிப்படை உரிமைகளுக்காகப் பெண்களும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து போராடுவதைக் காட்டுகின்றன.

## போராட்டத்தில் கட்சி, தொழிற்சங்கத்தின் பங்கு

அதிகாரவர்க்கத்தின் கீழ் அடிமையாக வாழ்ந்த மக்கள் விழிப்புணர்வு பெற்ற நிலையில் தொழிற்சங்கங்களில் இணைந்து செயல்பட முன்வந்தனர். கூலி விவசாயிகளாக, கூலித்தொழிலாளர்களாக வாழும் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காகப் போராட்டத்தில் ஈடுபடும்போது அவர்களுக்கு தொழிற்சங்கங்களும், கட்சிகளும் உறுதுணையாக நிற்கின்றன.

தோழிலாளி வர்க்கம் அரசை எதிர்த்து, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அரசியல் போராட்டத்தை நடத்தவேணடும். இத்தகைய அரசியல் போராட்டத்தின் மூலமே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும், பாட்டாளி வர்க்கச் சர்வ தேசியத்தையும் அமைக்க முடியும் என்கிறது மார்க்சியம். இந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட இயக்கமே பொதுவுடைமைக் கட்சி. இந்த அடிப்படையில் ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் தொழில்புரியும் பல்வேறு தொழிலாளர்களையும், விவசாயத்

தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்து, சங்கங்கள் அமைத்து அவர்களுடைய நலன்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் பொதுவுடைமைக் கட்சியினர் பாடுபட்டு வருகின்றனர்.

கூலி விவசாயத் தொழிலாளர்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியதற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பைச் "செந்நெல்" நாவல் விரிவாகப் பேசுகின்றது. பெரியானின் மகன் கண்ணுசாமி கட்சியில் சேர்ந்து உரிமைக்காகப் போராடுகின்றான். இதனால் ஆத்திரமடைந்த உயர்சாதியினர் கம்யூனிஸ்ட் கட்சியை விமர்சனம் செய்கின்றனர்.

"என்னா பெரியான்! ஒரு இடத்தில அடவா நின்னு உன்னோட மகன் கண்ணுசாமி வேலப் பார்க்கமாட்டான் போல இருக்கு! சேப்புக் கொடி தூக்கிறதிலத்தான் மும்முரமா இருக்கான். சாம்பானெல்லாம் இதுபோல சேப்புக்கொடி தூக்கிக்கிட்டு ஊர்வலம் போறது நல்லதுக்கு இல்ல. குடியத் தூக்கிட்டுப் போற நெலமை வந்துடும்." (செந்நெல், ப.5) என்று வரும் பகுதிகள் கூலி விவசாயத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினால் விழிப்புணர்வு பெற்று போராடுவதை அறிய முடிகின்றது.

சி.ஆர். ரவீந்திரனின் "தேயிலைக் கொழுந்து" நாவல் தேயிலைத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகக் கம்யூனிஸ்ட் கட்சியினர் போராட்டங்களில் பங்குகொள்வதைக் குறிப்பிடுகின்றது. தேயிலைத் தொழிலாளர்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தும்பொழுது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் முதல் அனைவரும் பங்குகொள்வதை நாவல் குறிப்பிடுகின்றது.

"அவருதா மருதம் தலைவரு, பக்கத்துல நடந்து வர்றாறே அவருதா எம். கிருஷ்ணன். பொதுக் காரியதரிசி. அவருக்கு வலக்கைப் பக்கம் வர்றவரு ஏ. ராமநாதன். அவருதா துணைக்காரியதரிசி. அப்பறமா ரண்டு பேரு வர்றாங்களே, அவங்கள்லெ ஒருத்தரு பாலகிருஷ்ணன் இன்னொருத்தர் வி.கே. தங்கசாமி" (தேயிலைக் கொழுந்து, பக் 158- 159) என்னும் பகுதிகள் தேயிலைத் தொழிலாளர்கள் தங்களின் உரிமைக்காக நடத்தும் போராட்டங்களில் அவர்களின் நலன்கருதி, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் முதல் அனைத்துப் பொறுப்பாளர்களும் கலந்துகொள்வதை எடுத்துரைக்கின்றன.

## முடிவுரை

எண்பது, தொண்ணூறுகளில் ஏற்பட்ட வர்க்கப் போராட்டத்தின் தீவிரம் இருபத்தோராம் நூற்றாண்டில் வெளிவந்த நாவல்களிலும் இடம் பெற்றுள்ளது. நிலவுடைமையாளர்கள், முதலாளிகளுக்கு எதிராகத் தங்கள் உரிமையைப் பெறத் தொழிலாளர்கள் போராட்டங்களைக் கையிலெடுக்கின்றனர். தொழிலாளர்களின் போராட்டங்களை முதலாளிகளும், அரசாங்கமும் காவல் துறையினரையும், அடியாட்களையும் கொண்டு ஒடுக்க முனைகின்றனர். தொழிலாளர்களின் போராட்டங்களைச் சீர்குலைக்க முதலாளிகள் சூழ்ச்சியைக் கையாளுகின்றனர். போராட்டங்களில் பெண்களும் பங்குகொண்டு பொதுவுடைமைக்காக் போராடுகின்றனர். தொழிலாளர்கள் உழைப்புச் சுரண்டலை எதிர்த்து இறுதியாகப் போராட்டங்களில்

ஈடுபடுகின்றனர்.

## References

Mohan. R., (1989) Novel Development, Manivasakar Publishing House, Chidambaram, India.

Sisupalan, R., (2009) Socialism and Marxism, New century book house, Chennai, India.

Adigalar, T.K., (1990) Religious Community, Madras University Publication, Chennai, India.

Kesavan, C., (1994) Social Liberation and Depressed Classes, Saravanabalu Publishing House, Villupuram, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License